[பேரவைத் தலைவர்] [2015 ஆகஸ்ட் 25

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(இ) மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants for the Financial Year 2015-2016."

12. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(ஆ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

(அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்*